பக்கங்கள்:-28

காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2058 | தை 14 | புதன்கிழமை | 28.01.2026 | அதிர்வு 181 |
|---|---|---|---|---|---|

### களியாட்ட நிகழ்வில்

# இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை!



அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுனாமிவத்தைப் பகுதியில் உள்ள வீடொன்றில் 09



## கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிரான

# நெடுங்கேணி போராட்டம் பெப்ரவரி 2 இற்கு மாற்றம்

### பொது அமைப்புகளுடனான விசேட கலந்துரையாடலில் தீர்மானம்

*(வவுனியா நிருபர்கள்)*

**அரசால் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து நடைமுறைப்படுத்தப் படவுள்ள கிவுல் ஓயா திட்டத்தை நிறுத்தக் கோரி, எதிர்வரும் 30ஆம் திகதி வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவிருந்த கவனவீர்ப்புப் போராட்டம், எதிர்வரும் பெப்ரவரி 2ஆம் திகதி திங்கட்கிழமை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.** 07






உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் பலருக்கும் தாங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற மட்டத்தில் எண்ணம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளு மன்றத்தில் பேசும் போது இருக்கின்ற சிறப்புரிமைகள் தத்தமது உள்ளூராட்சி மன்றங்களில் தாங்கள் உரையாற்றும்போது தங்களுக்கும் இருப்பதாக அவர்கள் நினைத்துக் கொண்டு, பிரேக் இல்லாத வாகனங்கள் போல தம் பாட்டில் பல விடயங்களை உளறிக் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். தாங்கள் கூறுகின்ற கருத்துகளுக்கு – வெளிப்படுத்துகின்ற தகவல்களுக்கு – தாம் பொறுப்பு கூறக் கடமைப்பட்டவர்கள் என்பது அவர்களில் பலருக்கு நினைவில் இருப்பதில்லைப் போலும்.

இத்தகைய உறுப்பினர்களின் சபை நடத்தைகள் தொடர்பில் உள்ளூராட்சி ஆணையாளரினால் முறையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட முடியும் என்பதை அவர்களில் பலர் 06







# டித்வா புயலுக்குப் பின் மீளக்கட்டுமானம்: அநுர அரசின் நடவடிக்கையில் வெற்றி!

## முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆளுநர் தெரிவிப்பு

டித்வா புயல் இடர்பாதிப்புகளிலிருந்து மக்களை மீட்டு, பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்கியுள்ளதுடன், அப்பணிகளை மிகச் சிறப்பாகக் கையாண்டு வருகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் 2026 ஆம் ஆண்டுக்கான முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இணைத்தலைவராக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2026ஆம்ஆண்டுவடக்கைபொறுத்த வரையில் ஒரு "அபிவிருத்தி ஆண்டாக" அமையவுள்ளது. முன்னெப்போதும் இல்லாத வகையில் இவ்வாண்டு அதிகளவான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. மாகாண சபையின் வழமையான நிதி ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக, மத்திய நிரல் அமைச்சுக்கள் ஊடாகவும் எமக்குக் கூடுதலான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப் பெறவுள்ளன. ஒதுக்கப்பட்ட நிதிகளை விட, மேலதிகத் திட்டங்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் மேலும் நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும்." - என்றார்.

ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கூட்டுறவுத்துறை பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தலைமையுரையாற்றுகையில்,

"மத்திய மற்றும் மாகாண நிதிகளுக்கு மேலதிகமாக, இவ்வாண்டு விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் வடக்கு மாகாணத்தில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பல புதிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன."- என்று குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன் வரவேற்புரையாற்றுகையில்,

"2025 இறுதியில் ஏற்பட்ட டித்வா பேரிடர் நிவாரணப் பணிகளுக்குச் சிறப்பான அரசியல் தலைமைத்துவமும், அதிகாரிகளின் ஒத்துழைப்பும் கிடைத்தது. பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் உரிய காலத்தில் வழங்கப்பட்டன. 2026இல் பல திட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ள நிலையில், மாவட்டத்தில் நிலவும் ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும்." - என்று கோரிக்கை முன்வைத்தார்.

இக்கூட்டத்தில், வடக்கு மாகாண சபைக்கு 2026ஆம் ஆண்டு கிடைக்கப் பெற்ற மொத்த நிதியில் 20 சதவீதம், அதாவது 1,592 மில்லியன் ரூபா முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ஒதுப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, 2025ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள்மீளாய்வுசெய்யப்பட்டதுடன், 2026ஆம் ஆண்டுக்கான புதிய அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனுமதியும் பெறப்பட்டது. பிரதேச செயலக மட்டத்தில் தீர்க்கப்பட முடியாத விடயங்கள் மற்றும் மாவட்டத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்தும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ து.ரவிகரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.











# நம்பிக்கையில்லாப் பிரேரணையை கேலிக்கூத்தாக மாற்றிய எதிர்க்கட்சி

## இப்படி அமைச்சரவைப் பேச்சாளர் விளாசல்



இலங்கையில் இன்று நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பதை அரசியல் நகைச்சுவையாக எதிரணி மாற்றியுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படும் என அறிவித்த எதிரணி, அதனை இன்னும் சபாநாயகரிடம் கையளிக்கவில்லை.

இந்நிலையில் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு எதிராகவும் நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் என்று எதிரணி தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பின்போது கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

"முதலில் பிரதமருக்கு எதிரான பிரேரணையை எதிரணியினர் முன்வைக்கட்டும். கையொப்பம் திரட்டி நாடகம் ஆடுவதுடன் நின்றுவிடாது நடவடிக்கையில் இறங்க வேண்டும்." – என்றார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை உரிய நேரத்தில் கையளிக்கப்படும் என எதிரணி கூறினாலும், கால எல்லை பற்றி கருத்துக் கூற மறுத்து வருகின்றது.

# முல்லைத்தீவில் குளவிகள் தாக்கி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சாவு!

முல்லைத்தீவு, மாங்குளம் பகுதியில் நேற்று பிற்பகல் குளவித் தாக்குதலுக்குள்ளான பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அன்ரனி ஜோர்ச் (வயது 53) என்பவரே உயிரிழந்தவராவார்.

மாங்குளத்தில் பாடசாலை மாணவர்கள் பாடசாலை முடிந்த பின்னர் வீடு திரும்பிக்கொண்டிருந்த போது பழைய கொலணிப் பகுதியில் குளவிக்கூடு ஒன்று கலைந்து அதிலிருந்த குளவிகள் வீதியால் சென்று சென்ற பிரதிக் கல்விப் பணிப்பாளரையும் 5 மாணவர்களையும் தாக்கியுள்ளன.



குளவிகள் கொட்டியதில் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், கடுமையான தாக்குதலுக்குள்ளாகியிருந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் உயிரிழந்துள்ளார்.

குளவித் தாக்குதலுக்குள்ளான 5 பாடசாலை மாணவர்கள் தொடர்ந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# ஷிராந்தி ராஜபக்ஷ சட்டத்தை மதித்துச் செயற்பட வேண்டும்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு





"நாட்டின் சட்டத்தை மதித்துச் செயற்பட வேண்டிய சமூக பொறுப்பு ஷிராந்தி ராஜபக்ஷவுக்கு உள்ளது." – என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாவதற்கு ஷிரந்தி ராஜபக்ஷ இரு வாரங்கள் அவகாசம் கோரியுள்ளமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் கூறியவை வருமாறு:–

"முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியாரே ஷிராந்தி ராஜபக்ஷ. அவர் இந்நாட்டில் முதல் பெண்மணியாக இருந்தவர். சிறார் பாடசாலையை வழிநடத்துபவர்.

எனவே, உரிய வகையில் விசாரணைக்குஒத்துழைக்கவேண்டியபொறுப்பு அவருக்கு உள்ளது. அவர் சட்டத்தை மதித்துச் செயற்பட வேண்டும்." – என்றார்.



# பாதுகாப்பு பிரதி அமைச்சருடன் நெதர்லாந்து தூதுவர் சந்திப்பு!

## இரு தரப்பு உறவுகளைவலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடல்

இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர், இலங்கை பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகரவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பாதுகாப்பு பிரதி அமைச்சரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது இருதரப்பு முக்கியத்துவம் தொடர்பான விடயங்கள் மற்றும் இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையிலான நீண்டகால இரு தரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

பேரிடரின் போதும், அதற்குப் பின்னரும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் ஒருங்கிணைந்து நெதர்லாந்து வழங்கிய உறுதியான ஆதரவுக்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் நன்றி தெரிவித்தார்.

அனர்த்தத்தின் பிந்தைய மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை நெதர்லாந்து தூதுவர் பாராட்டினார்.

இலங்கையின் முக்கிய வளர்ச்சி முன்னுரிமைகளுடன் இணைந்து, குறிப்பாக அனர்த்த அபாயக் குறைப்பில் நிபுணத்துவம் மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்வதில் நெதர்லாந்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.







# காலி மீன்பிடித் துறைமுக சுத்திகரிப்பு; இலங்கைக் கடற்படையின் பங்களிப்பு

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

'க்ளீன் ஸ்ரீலங்கா' தேசியத் திட்டத்தின் கீழ், காலி மீன்பிடி துறைமுகத்தில் சுத்தம் செய்யும் திட்டத்திற்கு கடற்படையின் சமூகப் பங்களிப்பு வழங்கப்பட்டது.

'வளமான நாடு – அழகான வாழ்க்கை' என்ற தொலைநோக்குப் பார்வையை நனவாக்கும் 'க்ளீன் ஸ்ரீலங்கா' தேசிய திட்டத்தை செயல்படுத்த நிறுவப்பட்ட ஜனாதிபதி பணிக்குழுவில் இலங்கை கடற்படை ஒரு முக்கிய பங்காளியாகும்.

கடற்படையினர், மற்ற தரப்பினருடன் இணைந்து, காலி மீன்பிடி துறைமுகப் பகுதியில் சட்டவிரோதமாகக் குவிந்திருந்த குப்பைகளை அகற்றி, துறைமுகப் பகுதியை சுத்தம் செய்வதில் அயராது பாடுபட்டனர்.







# வேகமாகப் பரவிவரும் டெங்கு; கடந்த ஆண்டை விட அதிகரிப்பு



நாட்டில், டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2026 ஆம் ஆண்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் கபில கன்னங்கர குறிப்பிட்டுள்ளார்.

2025 ஜனவரி மாதத்தின் குறித்த காலப்பகுதியில் சுமார் 4,970 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர் எனவும் இந்த வருடம் இதே காலப்பகுதியில் 6,521 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதன்படி கொழும்பில், 1,627 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பருத்தித்துறையில் வெடிகுண்டு மீட்பு

பருத்தித்துறை நகர் பகுதியில் இருந்து பண்டைய கால பீரங்கி என சந்தேகிக்கப்படும் பொருள் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் கட்டுமானப் பணிக்காக நேற்று முன்தினம் திங்கள் கிழமை நண்பகல் கிடங்கு வெட்டிய போதே இந்த பொருள் தென்பட்டுள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மறந்து விடுகின்றனர். அதனால் பல சபைகளிலும் கண்மண் தெரியாமல் அவர்கள் விளாசித் தள்ளுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

இப்போது அத்தகைய ஏழு உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மேலும் பலருக்கு எதிராக கோவைகள் திறக்கப்பட்டு விடயங்கள் பரிசீலிக்கப்படுகின்றன எனவும் கூறப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சி சபை உறுப்பினர்களில் முதற்கட்டமாக ஐவர் உள்ளூராட்சி மன்ற விதிமுறைகளுக்கு முரணாக செயல்பட்டதான குற்றச்சாட்டின் பேரில் விசாரணைகளை எதிர்கொள்ள இருக்கின்றனர் என்று தெரிகிறது.

இந்த உறுப்பினர்களுக்கு எதிரான விசாரணைகளுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் இடம் பெற்று, விடயம் மாகாண ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆளுநர் ஒப்புதல் வழங்கியதும் பெரும்பாலும் ஓய்வு பெற்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்படலாம் எனத் தெரிய வந்தது.

முதல் கட்டமாக விசாரணைகளை எதிர்கொள்ள உள்ள ஏழு உறுப்பினர்களில் ஆறு பேர் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு உட்பட்ட உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி அமைச்சருக்கான அதிகாரம் ஆளுநர் வசமே இப்போது உள்ளது. அவரின் அனுமதியோடு ஓய்வு பெற்ற நீதிபதிகள் தலைமையில் நடைபெறும் விசாரணைகளுக்கு சமுகமளிக்க – மதிக்க – தவறுவதோ, ஒத்துழைக்க மறுப்பதோ சம்பந்தப்பட்ட உறுப்பினரின் உள்ளூராட்சி சபை உறுப்புரிமையை விலக்கும் சூழலை ஏற்படுத்தலாம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

சபையில், அந்தச் சபைக்கு உட்பட்ட சபை ஊழியர்கள், நிர்வாகிகள் உட்பட பலருக்கும் எதிராக வாயில் வந்தது எல்லாம் பேசியவர்களிடம், ஆதார, ஆவண சாட்சியங்களை சமர்ப்பிக்குமாறு இந்த விசாரணைகளில் கோரப்படலாம் என்று தெரிகிறது.

ஒவ்வொரு சபையிலும் ஓரிரு சண்டப்பிரசண்டங்கங்கள் இருந்து கொண்டு பண்ணும் அழிச்சாட்டியம் சகிக்க முடியாமல் இருப்பது கண்கூடு. விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு, நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால்தான் பல சபைகள் இயங்கும் என்று தோன்றுகின்றது.

*   *   *

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி நகர சபை ஆகியவற்றுக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி தாக்கல் செய்த வேட்பு மனுக்களை நிராகரிக்கக் கோரி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் இலங்கைத் தமிழரசு கட்சியினர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் வழக்குகள் மீதான விசாரணை முடிவடைந்து விட்டது. வரும் ஒன்பதாம் திகதி தீர்ப்பு என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு உள்ளூராட்சி சபைகளிலும் அக்கட்சி சார்பில் போட்டியிட்ட ஒவ்வொரு பெண் வேட்பாளர்கள் அந்தச் சபைகளில் போட்டியிடுவதற்கான தகுதியற்றவர்கள் என்று உயர் நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது. அப்படி அந்தப் பெண் உறுப்பினர்கள் தகுதியற்றவர்களாயின் அந்த இரண்டு வேட்பு மனுக்களிலும் இடம்பெற்றிருக்க வேண்டிய மகளிர் எண்ணிக்கை உரியளவில் நிறைவு செய்யப்படாமல் போய்விடும் என்று கூறப்படுகின்றது. அந்த அடிப்படையில் இரு வேட்பு மனுக்களையும் முழுமையாக நிராகரிக்கும் உத்தரவை விடுக்குமாறு கோரியே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்காளிகள் சார்பில் சட்டத்தரணி கேசவன் சயந்தனின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தரப்பினர் சார்பில் சட்டத்தரணி குருபரனும் இந்த வழக்கில் தோன்றி வாதங்களைச் சமர்ப்பித்திருந்தனர்.

வழக்காளிகளின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமானால் சாவகச்சேரி நகர சபை நிர்வாகம் தலைகீழாக மாறுவதற்கான வாய்ப்பு உண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

# நெடுங்கேணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியா வடக்கின் பொது அமைப்புகளின் வேண்டுகோள் மற்றும் ஆலோசனையின் பிரகாரம் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பா. சத்தியலிங்கத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

"அரசால் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து நடைமுறைப் படுத்தப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்தை நிறுத்தக் கோருவது தொடர்பில், வவுனியா வடக்கைச் சேர்ந்த பொது அமைப்புகளுடன் தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து நெடுங்கேணியில் நேற்று விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தக் கிவுல் ஓயா திட்டத்தால் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பாக கலந்து கொண்டவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

மேலும், தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் ஆபத்துகளை இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கையாக, வவுனியா வடக்கின் நெடுங்கேணி பிரதேசத்தில் முன்னெடுக்கப்படவுள்ள கவனவீர்ப்புப் போராட்டம் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வவுனியா வடக்கின் பொது அமைப்புகளின் வேண்டுகோள் மற்றும் ஆலோசனையின் பிரகாரம், முன்னதாக எதிர்வரும் 30.01.2026 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) மேற்கொள்ளப்படவிருந்த கவன வீர்ப்புப் போராட்டத்தை, 02.02.2026 ஆம் திகதி (திங்கட்கிழமை) மேற்கொள்ள இணக்கப்பாடு எட்டப்பட்டு, தீர்மானம் இறுதி செய்யப்பட்டது.

அதன்படி, எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை, நெடுங்கேணி பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் வவுனியா வடக்கைச் சேர்ந்த பல்வேறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களான மருத்துவர் பா. சத்தியலிங்கம், து. ரவிகரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்." – என்றுள்ளது.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சிறாரைக் காப்போம்!

இலங்கையில் பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையில் அபாயகரமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 11 முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையை பரிசோதித்துப் பார்த்ததில் இத்தகைய மிகவும் கவலையளிக்கும் போக்கு வெளிப்பட்டதாக இலங்கைப் போதைப்பொருள் எதிர்ப்புச் சங்கம் தெரிவித்திருக்கின்றது.

இந்தப் பின்புலத்தில் பாடசாலை மாணவர்கள் சம்பந்தப்பட்ட போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்து பொலிஸார் கண்காணிப்பை அதிகரித்துள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு. வூட்லர் தெரிவித்திருக்கின்றார்.

பாடசாலைகளுக்கு அருகில் பாப்சிகிள்ஸ், பஞ்சு மிட்டாய், டொபி, பிஸ்கட் மற்றும் இனிப்புகளை விற்பனை செய்பவர்களாகக் காட்டிக் கொண்டு ‘மாவா’ மற்றும் பாபுல் போன்ற போதைப்பொருள்களை ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்கள் விநியோகிக்கின்றன என அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய நடவடிக்கைகள் தொடர்பாக இதுவரையில் 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐந்து கிராமுக்கு மேல் கொகோயின், கிரிஸ்டல் மெத்தம்பேட்டமைன் (‘ஐஸ்’) அல்லது ஹெராயின் வைத்திருப்பது இலங்கைச் சட்டத்தின் கீழ் மரண தண்டனைக்குரியது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை மாணவர்களைக் குறிவைத்து முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் விநியோகத்தைத் தடுப்பதற்கு சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் குறித்துத் தயங்காது முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொதுமக்களை வலியுறுத்தியிருக்கின்றார்.

நாட்டில் அதிக போதைப்பொருள் பாவனையாளர்கள் 16 முதல் 25 வயதுக்கு உட்பட்டவர்களாக உள்ளார்கள். முக்கியமாக, பாடசாலை சிறார்களை குறிவைக்கும் பொருள்கள், இனிப்புகள் மற்றும் உபசரிப்புகளுடன் கூடிய மருந்துகள் மற்றும் மயக்க மருந்துகள் சிறார்களுக்கு அவர்கள் அதன் பாதிப்பை அறியாத காலத்தில் - புரியாத வயதில் - அவர்களுக்குத் தெரியாமலேயே, பழக்கப்படுத்தப்பட்டு, அந்த சகதிக்குள் - வலைக்குள் - அவர்கள் வீழ்த்தப்படுகின்றார்கள். அவை பெரும்பாலும் சிறார்கள் பயிலும் கல்வி நிறுவனங்களுக்கு அருகில் சந்தேகத்திற்குரிய விற்பனையாளர்களால் விற்கப்படுகின்றன. இந்த வஞ்சகமான அணுகுமுறை, சிறு வயதிலேயே சிறுவர்களை மென்மையான போதைப் பொருளுக்குள் இழுத்து, அதன் மூலம் ஐஸ் மற்றும் ஹெரோயின் போன்ற கடினமான போதைப்பொருள்களுக்கான தேவைக்கான நெகிழ்வை பிற்காலத்தில் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாணவர்களிடையே அதிகரித்து வரும் போதைப்பொருள் பயன்பாட்டைத் தடுப்பதற்கு பாடசாலை மட்டத்தில் குழுக்களை நிறுவுவதற்குப் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையுடன் இணைந்து இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

ஆயிரத்துக்கும் அதிகமான பாடசாலைகளில் ஏற்கனவே இதுபோன்ற குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் பிரதிநிதி ஆகியோர் அடங்குகின்றனர். 25 மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளில், போதைப்பொருள் பரவுவதைத் தடுப்பதே இந்த முயற்சியின் நோக்கமாகும் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

நமது அடுத்த தலைமுறையை - இன்றைய சிறார்களை - போதைப் பொருள் அரக்கனின் பிடியிலிருந்து பாதுகாத்து மீட்பதற்கு, சட்டத்துறையினர், பொலிஸார், கல்வி நிர்வாகிகள் மாத்திரமன்றி முழு நாடும், சமுதாயமும், ஐக்கியப்பட்டு - ஒன்று சேர்ந்து - செயல்பட முன்வர வேண்டும். அத்தகைய தீவிர கூட்டு முயற்சி இருந்தால் மாத்திரமே போதைப்பொருள் அரக்கனின் கொடூரப் பிடியிலிருந்து அடுத்த தலைமுறையை நாங்கள் தப்புவிக்க முடியும்.

## இளைஞர் ஒருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெற்ற களியாட்ட நிகழ்வின் போது இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 28 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று செவ்வாய்கிழமை இரவு நடந்த விருந்துபசாரத்தின் போது, அடையாளம் தெரியாத இருவர் துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர் எனவும், படுகாயமடைந்த நபர் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், பிஸ்டல் வகை துப்பாக்கிப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்கின்றன.




# ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் கனடாத் தூதருடன் யாழில் நேற்றுச் சந்திப்பு



**(பூ.லின்ரன்)**

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினருக்கும் இலங்கைக்கான கனடா தூதுவருக்கும் இடையில் நேற்று மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் ஜே ஹோட்டலில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், எதிர் கால அரசியல் நகர்வுகள் மற்றும் முக்கியமான பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது எனத் தெரிகின்றது.

இக்கலந்துரையாடல் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக இடம் பெற்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் இணைத்தலைவர்கள் மற்றும் கட்சியின் செயலாளரும் இதில் கலந்து கொண்டனர்.

இதே வேளை யாழ்ப்பாணத்தில் கனடாத் தூதுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் நேற்று முன்தினம் மாலை சந்தித்துப் பேசினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் ரயிலுடன் மோதிய மோ. சைக்கிள் மயிரிழையில் உயிர் தப்பிப் பிழைத்த பெண்மணி




**(கி.வசந்தன்)**

வவுனியா, தாண்டிக்குளத்தில் இடம் பெற்ற ரயில் விபத்தில் பெண் ஒருவர் மயிரிழையில் உயிர் தப்பிய சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா தாண்டிக்குளம் ரயில்வே கடவையில் ரயில்வே சமிக்கையை மீறி பெண் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார்.

இதன்போது யாழில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த ரயிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

விபத்தில் கிடாச்சூரி, சாஸ்திரி கூழாங்குளத்தை சேர்ந்த அல்பிரட் ஜெயராஜ் திலகவதி (வயது-52) என்பவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையினை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாவகச்சேரியில் தென்னிந்தியக் கலைஞர்களின் சாஸ்திரிய ஆற்றுகை நடன நிகழ்வு நேற்று மாலை






(த.சுபேசன்)

சாவகச்சேரி நகராட்சி மன்றமும் யாழ் இந்திய துணைத்தூதரகமும் இணைந்து தென்மராட்சி மண்ணில் முதன்முறையாக நடத்திய 'தென்னிந்தியக் கலைஞர்களின் சாஸ்திரிய ஆற்றுகை' நடன நிகழ்வு நேற்று செவ்வாய்கிழமை மாலை நகராட்சி மன்றத்தின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்றது.

நகராட்சி மன்றத் தவிசாளர் வ.ஸ்ரீபிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்விக் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார்.

நிகழ்வில் தென்னிந்தியக் கலைஞர்களின் கதகளி மற்றும் மோகினியாட்டம் ஆகிய ஆற்றுகைகள் இடம்பெற்றன.

மேலும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள்,பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# செட்டிகுளத்தில் விபத்து; நால்வர் படுகாயம்






(கி.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னாரில் இருந்து மாதவாச்சி நோக்கிப் பயணித்த கூலர் ரக வாகனமும் மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்து ஜீப் ரக வாகனமும் செட்டிக்குளம் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் மோதி விபத்துக்குள்ளகியுள்ளன.

இந்த விபத்தில் படுகாயமடைந்த நால்வர் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து வீதியில் நின்ற கட்டாக்காலி மாடுகளினால் ஏற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் போது தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# சுதந்திர தின கரிநாளுக்கு பூரண ஆதரவு தாருங்கள்!

## தென்கையிலை ஆதீன முதல்வர், திருமலை ஆயர் அழைப்பு

சுதந்திர தினத்துக்கு எதிராக வடக்கு கிழக்கில் நடைபெறவுள்ள கரி நாள் பேரணிக்கு அனைத்து தரப்புக்களும் பங்கேற்று வலுச்சேர்க்க வேண்டும் என தென்கையிலை ஆதீன முதல்வர் மற்றும் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் ஆகியோர் அழைப்பு விடுத்தனர்.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியை கரி நாளா கப் பிரகடனப்படுத்தி, வடக்கு, கிழக்கில் போராட்டத்தை நடத்தத் தீர்மானித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அதற்கு பொதுமக்களை அணி திரட்டி வலுச்சேர்க்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

இதனொரு கட்டமாக தென்கையிலை ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் மற்றும் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானு வேலை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்பின்னர் கருத்து தெரிவித்த திருகோணமலை மறை மாவட்ட ஆயர், "தமிழ் மக்களின் தேவைகள் பலவா றாக இருந்தாலும் பல வழிகளில் அவை நிராகரிக்கப்படுகின்றன அல்லது பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. இதை வலியுறுத்தி நடைபெறும் போராட்டம் வெற்றி பெற அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும்" – என்றார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தென்கையிலை ஆதீனம்,

"1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு சாபக்கேடான நிலையே அமைந்தது. அந்தச் சுதந்திர தின நாளை கரி நாளாக அனுஷ்டிக்க வருங்கால சந்ததியான பல்கலைக் கழக இளைஞர்கள் முயற்சிகளை முன்னெடுக்கிறார்கள். அந்த முன்னெடுப் புக்கு இலங்கையில் வாழ்கின்றவர்கள், புலம்பெயர் தேசத்தில் வாழ்கின்ற மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும். இந்தப் பூரண ஆதரவே எமது மக்களின் இருப்பையும் சிதைவினையும் தடுக்கவும் உதவும்" – என்றார்.











# மனித உரிமை ஆர்வலர் குமாருக்கு வவுனியாவில் அஞ்சலி

(கி.வசந்தன்)

எங்களால் பேச முடியாத போது எங்கள் குரலை எடுத்துச் சென்றவர் மனித உரிமைக் போராளி ரி.குமார் என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ரி.குமார் என்று அழைக்கப்படும் த.முத்துக்குமாரசாமி அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோது அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

146,000-க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டமைக்கும், 30,000-க்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டமைக்கும் நீதி வேண்டி நாங்கள் இன்றும் அமெரிக்காவையும், ஐரோப்பிய ஒன்றியத்தையும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

இந்த நீண்ட போராட்டப் பயணத்தில், ரி. குமார் என்றழைக்கப்படும் தம்பித்துரை முத்துக்குமாரசாமி அவர்களை ஆழ்ந்த நன்றியுடனும், மரியாதையுடனும், துயரத்துடனும் நினைவுகூருகின்றோம்.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றதிலிருந்து தமிழ் அரசியல் முயற்சிகளின் தொடர்ச்சியான தோல்விகளுக்கு மத்தியில் அவர் தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் இரண்டாம் தலைமுறையில் ஒரு முக்கிய ஆளுமையாக உருவெடுத்தார்.

முறிந்துபோன வாக்குறுதிகளுக்கும், நாடாளுமன்ற அரசியலின் மாயைகளுக்கும் அப்பால் அவர் மனித உரிமைகள், சர்வதேச சட்டம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை தமிழ் மக்களின் போராட்டத்தின் மையத்தில் வைத்தார்.

சர்வதேச மன்னிப்புச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் கைதியாகவும், "மனசாட்சிக்குக் கட்டுப்பட்ட கைதியாகவும்", குமார் துன்பத்தை ஒரு கோட்பாடாக அல்லாமல், ஒரு நேரடி யதார்த்தமாக அனுபவித்தார். அவரது கல்விஅறிவை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான நீதிக்காக முழுமையாக அர்ப்பணித்தார்.

விஷிங்டன் டி.சி. மற்றும் ஜெனீவாவில், ரி.குமார் தமிழர்களுக்காகப் பேசிய மிகவும் செல்வாக்கு மிக்க மனித உரிமை ஆர்வலர்களில் ஒருவராக இருந்தார். அந்த வேதனையை அவர் அமெரிக்க காங்கிரஸ், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச மனித உரிமை மன்றங்கள் வரை எடுத்துச் சென்று, தமிழர்கள் அனுபவித்த துயரங்களை உலகிற்கு வெளிப்படுத்தினார்.

1977ஆம் ஆண்டு நடந்த இனக் கலவரங்களின் போது, கொழும்பில் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த தமிழர்களை, லங்கா ராணி என்ற பயணக் கப்பல் மூலம் தமிழ் தாயகமான வடகிழக்கிற்குச் செல்ல ரி. குமார் அவர்கள் முக்கியப் பங்காற்றினார்.

1983 ஆம் ஆண்டு ஜூலை இனக் கலவரங்களின் போது, அவர் அமெரிக்காவின் பொஸ்டன் நகரத்தில் இருந்த போதும், அகதி முகாம்களில் பணியாற்றிய தன்னார்வலர்களுக்கு வழிகாட்டி, பல தமிழர்கள் பாதுகாப்பாகத் தங்கள் தாயகத்தை அடைய உதவினார்.

உள்நாட்டு விசாரணைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்காது, ஒரு சர்வதேச விசாரணை அவசியம் என்றார். இன்றைய வரலாறு அவரது எச்சரிக்கையை உண்மையென நிரூபித்துள்ளது.

சர்வதேச மேற்பார்வையின் கீழ் நடத்தப்படும் ஒரு சுயநிர்ணய வாக்கெடுப்பு மட்டுமே தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கான ஜனநாயக வழி என்று ஆழமாக நம்பினார். மேலும் அதற்காகத் தனது வாழ்நாள் முழுவதும் போராடினார். குரலற்ற மக்களுடன் அவர் உறுதியாக நின்றார். நாங்கள் பேச முடியாதபோது எங்கள் குரலை எடுத்துச் சென்ற ஒரு மனிதர். - என்றனர்.













# திருக்கேதீஸ்வர மகா சிவராத்திரி பெருவிழா குறித்து அரச அதிபர் தலைமையில் விசேட கலந்துரையாடல்





**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்றான மன்னார் மாவட்டத்தின் திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தின் மகா சிவராத்திரி பெருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி சிறப்பாக நடைபெற உள்ள நிலையில் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பாக ஆராயும் முதலாவது கலந்தாய்வுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணிக்கு மன்னார் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மகா சிவராத்திரி பெருவிழா ஒழுங்குமுறையுடனும் பாதுகாப்பாகவும் பக்தர்களுக்கு எந்தவித அசௌகரியமும் ஏற்படாத வகையிலும் நடத்தப்படுவது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபை, வீதி அபிவிருத்தி திணைக்களம், பிரதேச சபை ஆகியவற்றின் பங்களிப்புடன் வீதி ஒழுங்குபடுத்தல் இலங்கை போக்குவரத்துச் சபை (இ.போ.ச.) மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கங்களின் ஊடாக போக்குவரத்து மேலாண்மை மேற்கொள்வது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சுகாதாரம் மற்றும் சுத்திகரிப்பு பணிகள், மின்சார விநியோகம், நீர் விநியோகம், உணவு வழங்கல், பாதுகாப்பு விடயங்கள், சாரணியர் சேவை, செஞ்சிலுவைச் சேவை, சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், முதலுதவி படை, மருத்துவ அவசர ஊர்தி சேவைகள் ஆகியவை தொடர்பான ஏற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அத்துடன் , வாகன அனுமதி பத்திரங்கள் வழங்கல், பிரதேச செயலகம் – மன்னார் இணைப்பு அலுவலகம் அமைத்தல், தற்காலிக கொட்டகைகள் அமைத்தல், வர்த்தக நிலையங்கள் ஒழுங்குபடுத்தல், வாகனத் தரிப்பிடங்கள் ஏற்பாடு, ஊடக நடவடிக்கைகள், தீயணைப்பு சேவை, களப்பயண திகதி நிர்ணயம், விலைக் கட்டுப்பாடு உள்ளிட்ட மேலதிக விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு, சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில் திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபையின் தலைவர் இராமக்கிருஷ்ணன், மேலதிக அரசாங்க அதிபர்கள், பிரதம கணக்காளர், பிரதம உள்ளக கணக்காய்வாளர் மற்றும் அரச திணைக்களங்கள், பாதுகாப்பு பிரிவுகள், சுகாதார சேவைகள், போக்குவரத்து நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# அரச பஸ்ஸின் டயருக்குக் காற்றுப் போனமையால் பாடசாலை செல்லாமல் வீடு திரும்பிய மாணவர்கள்

## வடமராட்சி கிழக்கு மக்களின் அன்றாட அவலநிலை





**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் நேற்று விடியற்காலை அரச பஸ் காற்றுப் போனதால் மாணவர்கள், அரச அதிகாரிகள். ஊழியர்கள், மருத்துவ நோயாளிகள் சிரமத்திற்கு உள்ளாகினர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருபவை வருமாறு:-

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காட்டில் இருந்து காலை 6 மணிக்கு அரச பஸ் பருத்தித்துறை நோக்கி சேவையில் ஈடுபடுவது வழக்கம்.

வடமராட்சி கிழக்கில் சேவையில் ஈடுபடும் அரச பஸ்கள் தரமற்றுக் காணப்படுகின்றமையால் அடிக்கடி அந்த் பஸ்கள் இடை நடுவே பழுதடைகின்றன. இதனால் மாணவர்கள் உட்பட பலர் தொடர்ச்சியாகஓ பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்றுக் காலை 6.00 மணிக்கு கட்டைக்காட்டில் இருந்து பருத்தித்துறை சேவையில் ஈடுபட வேண்டிய அரச பஸ் சேவையில் ஈடுபடவில்லை. அந்த பஸ்ஸின் டயர் காற்றுப்போய்க் காணப்பட்டமையால் சேவையில் ஈடுபட முடியவில்லை என்று சாரதி தெரிவித்தார்

இதனால் வீதியோரம் மாணவர்கள், அரச அதிகாரிகள், ஊழியர்கள், மருத்துவ நோயாளிகள் உரிய இடங்களுக்கு செல்ல முடியாமல் தவித்தனர். அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பஸ் சேவையில் ஈடுபடாமையால் பாடசாலைக்கு செல்லாமல் வீடுகளுக்குத் திரும்பிச் சென்றனர்.

அண்மைக்காலமாக வடமராட்சி கிழக்கில் சேவையில் ஈடுபடும் அரச மற்றும் தனியார் பஸ்கள் தொடர்ந்து சீரின்றி இயங்கி வருகின்றன. இது, அதிகாரிகளுக்கு மக்கள் மீது அக்கறை இன்மையைக் காட்டுவதாகவும் வடமராட்சி கிழக்கு மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.





# அட்டாளைச்சேனை - கோணாவத்தை இடையே வீதியில் வீசப்பட்ட அறுத்த மாடுகளின் கழிவுகள்

(அபு அலா)

அட்டாளைச்சேனை மற்றும் கோணாவத்தையை இணைக்கும் இரும்பு பாலத்திலும், ஆற்றிலும் அறுத்த மாடுகளின் கழிவுப் பொருள்களை இனந் தெரியாதவர்கள் வீசிச் சென்ற சம்பவம் நேற்று முன்தின்ம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக, அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் அவ்வட்டார பிரதேச சபை உறுப்பினர் அஸ்வர் சாலி ஆகியோர்களின் கவனத்திற்கு அப்பிரதேச மக்களினால் கொண்டு செல்லப்பட்டது. அந்த இடத்திற்கு உடனடியாக வருக்சி தந்த தவிசாளர் மற்றும் உறுப்பினர் ஆகியோர் அது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து அக்கழிவுகளை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கையை முன்னெடுத்தனர்.



# யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் ‘மறுபக்கம்’ படக்காட்சி ஞாயிறன்று!

யாழ்ப்பாணத் திரைப்படக் கழகத்தின் 23 ஆவது திரைப்படக் காட்சியாக “மறுபக்கம்“ என்ற தமிழ் திரைப்படம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு, 18/2, அம்மன் வீதியிலுள்ள “எங்கட புத்தகங்கள் இல்லத்தில்“ திரையிடப்பட விருக்கிறது. இந்நிகழ்வுக்கு அனுமதி இலவசம்.

இந்திய தேசிய திரைப்பட விருது பெற்ற “மறுபக்கம்“ என்ற எண்பது நிமிட நேரம் காட்சிப்படுத்தக் கூடிய மேற்படி திரைப்படம் 1990 களில் வெளிவந்து பலரது பாராட்டைடயும் பெற்றது. அதனை கே.எஸ்.சேது மாதவன் நெறியாள்கை செய் திருக்கிறார்.

இத் தொடர் நிகழ்வுக்கு அனுசரணை வழங்கி வரும் “எங்கட புத்தகங்கள் இல்லம்“ பலாலி வீதி, கந்தர் மடச் சந்திக்கு அருகாமையில் உள்ள வீனஸ் மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# அரச பயங்கரவாதத்தை மேலும் பலப்படுத்தி நாட்டை ஆளத் துடிப்பதை ஏற்க முடியாது!

## நாடு தழுவிய ரீதியில் மக்கள் ஒன்று சேர்ந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் என்கிறார் அருட்தந்தை சத்திவேல்

(பா.சதீசன்)

அரச பயங்கரவாதத்தை பலப்படுத்தி நாட்டை ஆளத் துடிப்பதை ஏற்க முடியாது. இதற்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

– இப்படி சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.


அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் மக்கள் சக்தியை இழந்து விடுவோம் எனும் பய நிலையிலும் மக்கள் விடுதலை முன்னணி மக்களின் விடுதலையை மறந்து முதலாளித்துவத்தின் பாதையில் பயணிப்பதால் தம்மை பாதுகாத்துக் கொள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டமூலத்தை சட்டமாக்கத் துடிப்பதாக உணரமுடிகிறது. இது அவர்களின் அரசியல் மற்றும் பொருளாதாரத் தோல்விகளையே வெளிப்படுத்துகின்றது. தேர்தல் காலத்தில் 'பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்குவோம். அதற்கு பதிலாக புதிய சட்டத்தை கொண்டு வர மாட்டோம்' என மக்களுக்கு அளித்த வாக்குறுதியை இது மீறும் செயல் மட்டுமல்ல வாக்களித்த மக்களின் அடிப்படை உரிமைகளை பறித்து, அவர்களை சடலங்களாக மட்டும் வாழ வைக்கும் வன்கொடுமைச் சட்டமுமாகும். அரச பயங்கரவாதத்தை பலப்படுத்தி நாட்டை ஆளத்துடிப்பதை ஏற்க முடியாது. இதற்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்க மக்களின் கருத்தறிய வைத்துள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டமூலத்தில் அரச பயங்கரவாதம் உச்சம் தொட்டுள்ளதைக் காணலாம். பயங்கரவாதத் தடை சட்டம் கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவினதும், ஐக்கிய தேசிய கட்சியினதும் கொடிய முகத்தினை தமிழர்கள் கண்டார்கள். தற்போது பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டமூலத்தில் அன்று ஜே.ஆர்.ஜெயவர்தனவிற்கும் அவரது கட்சிக்கும் இல்லாத வன்கொடுமை முகம் தேசிய மக்கள் சக்திக்கும் அதன் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவிற்கும் இருப்பதாகவே மனித உரிமை செயல்பாட்டாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

இவர்கள் இதை சட்டமாக்கினால் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு எனும் சொற்களில் பொதிந்துள்ள முழு அர்த்தமும் அரச பயங்கரவாதத்தால் காணாமல் ஆக்கப்பட்டு விடும்.



தமிழர்களைப் பொறுத்தவரையில் இது எப்போதோ காணாமலாக்கப்பட்டு விட்டது.

இதுவா தேர்தல் காலத்தில் தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு கூறிய மாற்றத்தின் அடையாளம்? இதுவா தேசிய மக்கள் சக்தி கூறும் 'வளமான நாடு – அழகான தேசம்' என்பதன் தோற்றப்பாடு?

லஞ்சம் மற்றும் ஊழல்வாதிகள், பாதாள உலகினர், அதன் உறுப்பினர்கள், போதைப்பொருள் கடத்தல் காரர்கள், அதன் விநியோகஸ்தர்கள், அரசு வளங்களையும் சொத்துக்களையும் கொள்ளையடித்த அரசியல்வாதிகள், அரச அதிகாரிகள் சிறையில் தள்ள வேண்டும் என்பதில் மாற்று கருத்து இல்லை. இது அரசியல் பலத்தினால் வளர்க்கப்பட்ட ஒன்று. இது நாட்டிலிருந்து துடைத்தெறியப்பட வேண்டும். அச்செயல் மட்டுமே அரசியலாக முடியாது. அதனை வைத்து தேசிய மக்கள் சக்தி அரசியல் நாடகமாடுகின்றது. மக்கள் வறுமையில் இருந்து மீள முடியாது துடிக்கின்றனர்.

நாட்டு மக்களுக்கு தமது எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை இல்லை. ஆட்சியாளர்களின் அரசியல், பொருளாதாரம் விடயங்களில் தமது தோல்விகளை மறைக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பயங்கரவாதத்தை பலப்படுத்தும் சட்டத்தை கொண்டு வருவதை எந்த வகையிலும் ஏற்க முடியாது.

கடந்த கால அரசியல் ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்த பேரினவாத ஆதிக்க மன நிலையில் இருந்து தமிழர்களின் அரசியல் பிரச்சினைகளை தீர்க்க எந்த விதமான தீர்க்கமான செயற்பாட்டிலும் இறங்கவில்லை. தமிழர்களின் உரிமைகளை கேட்டு அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்ட வடக்கு, கிழக்குத் தமிழர்களை பயங்கரவாதிகளாக்கி அந்நிய நாடுகளின் துணையோடு இனப்படுகொலை–களை நிறைவேற்றி மகிழ்ந்தனர். இதற்குத் தேசிய மக்கள் சக்திக்குள் மறைந்து ஆட்சியை கைப்பற்றியிருக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கு பெரும் பங்குண்டு.

இந்த யுத்தமே நாட்டை அனைத்து வழிகளிலும் வீழ்ச்சிக்கு கொண்டு சென்றது. இதன் முதல் முழு பொறுப்பையும் மக்கள் விடுதலை முன்னணியும் தேசிய மக்கள் சக்தியுமே ஏற்க வேண்டும்.

இவ் வீழ்ச்சிலிருந்து எழ முடியாத நிலையில் மக்கள் எழுச்சியை தடுப்பதற்கு புதிய சட்டத்தை கொண்டு வருவது அரசியல் நாகரீகமற்ற செயலாகும்.

மேலும் தற்போதைய ஆட்சியாளர்கள் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளோடும் இரகசிய ஒப்பந்தங்களையும் செய்துள்ளனர். ஒரு காலத்தில் வெளிநாடுகளோடு செய்து கொள்ளப்படும் ஒப்பந்தம் நாடாளுமன்றில் வெளியிடப்பட வேண்டும் எனக் கூறிய அநுரகுமார திஸ்நாயக்கவின் ஆட்சியிலேயே அவ்வாறான ஒப்பந்தங்கள் மூடி மறைக்கப்படுகின்றன. நாட்டின் இறைமை காட்டிக் கொடுக்கப்படுகின்றது. வல்லரசுகளின் ஆதிக்கம் நாளுக்கு நாள் அதிகரிக்கும் சூழ்நிலையில் மக்களுடைய எதிர்ப்பினை சமாளிப்பதற்கு தற்போதைய ஆட்சியாளர்களுக்கு புதிய பயங்கரவாதஸ் சட்டம் தேவையாக உள்ளது.

பயங்கரவாதத்தில் இருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டமூலத்தை முன் வைப்பதற்கு இன்னும் ஒரு முக்கிய நோக்கம் உண்டு. முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையைத் தொடர்ந்தும் வடக்கு, கிழக்கு தமிழர்கள் தமது பாரம்பரிய தாயகம், தேசியம், இறைமை, சுயநிர்ணய உரிமை தொடர்பான கருத்தாடலிலும் அதை நோக்கிய அரசியல் செயல்பாட்டிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதனை முற்று முழுவதுமாக அழித்து அரசியல் ரீதியில் தமிழர்களை எழ முடியாமல் இறுதி அரசியலில் முள்ளிவாய்க்காலுக்குள் தள்ளுவதே இவர்களின் இலக்கு. அதற்கு ஏற்ற வகையிலேயே விடயங்கள் புதிய சட்டமூலத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன. எமது அரசியல் பேசப்படும் இடங்கள் தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாகவும் அறிவிக்கலாம். இதனை வடக்கு, கிழக்கு தமிழர்களின் ஆதரவோடு செய்வதாக காட்டிக் கொள்வதற்கும் முனைகின்றனர். இதற்கு எமது எதிர்ப்பை வெளிப்படுத்தி, எமது மக்களை அரசியல் ரீதியில் பலப்படுத்த வேண்டுமானால் கொண்டு வரப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு முழு அளவில் எமது எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும்.

பயங்கரவாத தடை சட்டத்தால் தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டனர். தற்போது மக்கள் முன் வைக்கப்பட்டுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்பதற்கான சட்டமூலத்தின் மூலம் முழு நாட்டையுமே அடக்கி ஒடுக்கி மக்களை ஆள நினைக்கின்றனர்.

இத்தகைய அரசியல் அபாய நிலையில் இருந்து தமிழர்கள் தம்மை தற்காத்து அரசியலை நகர்த்தவும், தெற்கின் மக்களோடு அவர்களின் உரிமைகளுக்காக குரல் எழுப்பவும், நாடு தழுவிய ரீதியில் நடைபெறும் போராட்டங்களுக்கு எமது ஆதரவை வெளிப்படுத்தி எதிர்ப்பை வெளிப்படுத்துவோம். அதுவே எமது அரசியல். – என்று உள்ளது.

# இராமர் பாலத்தின் தீடைகள் நோக்கிய படகுச் சேவை தலைமன்னாரில் இருந்து மார்ச் 3ஆம் திகதி ஆரம்பம்



(ந.லோகதயாளன்)

தலைமன்னாரில் இருந்து இராமர் பாலத்தின் தீடைகள் (மணல் திட்டுகள்) நோக்கிய சுற்றுலாப் பயணிகள் படகுச் சேவை மார்ச் 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவின் இடையே உள்ள மணல் தீடைகள் நோக்கி தலைமன்னாரில் இருந்து சுற்றுலாப் பயணிகளுக்கான படகுச் சேவையை ஆரம்பிக்கும் திட்டம் கடந்த ஆண்டு உள்ளூராட்சி தேர்தல் பிரச்சாரத்திற்காக மன்னார் வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்காவினால் அறிவிக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் இடம்பெறும் என அப்போது ஜனாதிபதி அறிவித்தார். ஜனாதிபதி அறிவித்தமைபோன்று கடந்த ஆண்டு நிறைவு பெறும் வரையில் படகுச் சேவையை ஆரம்பிக்க முடியவில்லை.

இந்தப் படகு சேவையே 2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி வனஜீவராசிகள் தினத்தில் ஆரம்பிக்கப்படும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பிக்கவுள்ள சுற்றுலா பயணிகள் படகு சேவைக்கான தீடைகள் வனஜீவராசிகள் திணைக்களத்தின் ஆளுகையில் உள்ள பிரதேசம் என்பதனால் இப்படகு சேவையை தாமே நாடத்த வேண்டும் என வனஜீவராசிகள் திணைக்களம் உறுதியாக இருந்தது. உள்ளூராட்சி மன்ற எல்லையில் வேறு திணைக்களம் வருமானம் ஈட்ட முடியாது, அதனை உள்ளூராட்சி மன்றமே நடாத்த வேண்டும் என்பதோடு படகு சேவை ஆரம்பிக்கும் இடம் பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள பூங்காவிற்கு உரிய இடம், எனவே அந்த சேவை சபையின் ஆளுகையில் வர வேண்டும் என்று மன்னார் பிரதேச சபை தெரிவித்தது.

இறுதியில் இரு கட்டமைப்புகளும் 50 வீத உடன்பாட்டில் இணக்கத்திற்கு வந்துள்ளன. இதற்கமைய நடத்தப்படவுள்ள படகு சேவைக்காக பொலிஸ் பதிவு, மீன்பிடித் திணைக்களம், பிரதேச சபை, வன ஜீவராசிகள் திணைக்களம் என்பவற்றுடன் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றின் அனுமதிகள் பெறப்பட்டுள்ளன.

இப் படகு சேவையில் உள்ளூர் மீனவ அமைப்புக்கள், சுற்றுலா விடுதிகள், கிராமத்தவர்கள் உள்ளிட்ட 52 ற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்துள்ளனர். இந்த 52 பெயர் பட்டியலில் முதல் கட்டமாக 22 பேர் தேர்வு செய்யப்பட்டு, அவர்கள் படகுகளை தருவித்துள்ளனர்.

ஒரு நிறுவனம் மட்டும் 12 படகுகளை தருவித்துள்ளது.


இப் பணியை விரைவுபடுத்தும் வகையில் கடந்த வாரம் மன்னார் பிரதேச செயலாளர், மன்னார் மேலதிக அரச அதிபர், வன ஜீவராசிகள் திணைக்களம், பிரதேச சபை என்பவற்றுடன் முதலீட்டாளர்களும் தலைமன்னாரில் படகு சேவை ஆரம்பிக்கும் இடமான கிராமம் தெற்கு கிராம சேவகர் பிரிவான மன்ஃ48 இடத்திற்கு நேரடி கள விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இப் படகு சேவையில் ஈடுபட அதிக முதலீட்டாளர்கள் – அதாவது 52 பேர் – அதிக ஆர்வம் காட்டுவதனால் சுற்றுலாப் பயணிகள் படகிற்கு காப்புறுதி செய்ய வேண்டும் என்ற நிபந்தனையை புகுத்துவதன் மூலம் பயணிகளிற்கும் நம்பிக்கை ஏற்படுவதோடு போட்டியாளர்களையும் மட்டுப்படுத்த முடியும் என தற்போது திட்டமிடப்படுகின்றது. ஏனெனில் பயணிகள் படகுச் சேவைக்கான காப்புறுதித் தொகை அதிகமானது.

இதேநேரம் இப் படகு சேவையானது சுற்றுலாப் பயணிகள் படகு சேவை என்பதனால் மன்னாருக்கு சுற்றுலாவில் வருபவர்களும் பயன்படுத்த முடியும் என்றால், அது இலங்கையர் அல்லாதோரும் பயன்படுத்தும் சந்தர்ப்பம் உண்டு என்றதன் அடிப்படையில், தமது நாட்டின் கொல்லைப்புறம் வரையில் சர்ச்சைக்குரிய தரப்புகளின் ஆள்களும் வந்து எட்டிப் பார்க்கும் நிலையை உருவாக்கும் என இந்தியா எண்ணுகின்றது.

இந்த சூழலில் ஏற்கனவே மன்னாரில் அமைக்கப்படும் காற்றாலைத் திட்டங்களில் இந்தியாவின் பகைமை நாடுகளாக கருதப்படும் பாகிஸ்தான் மற்றும் சீனர்களின் அதிகரித்த பிரசன்னம் என்னும் தலையிடி இந்தியாவை நெருக்கடிக்கு உள்ளாக்குவதற்கு மத்தியில், அடுத்த கட்டமாக எல்லை வரையான சுற்றுலாப் பயணிகள் படகு சேவை என்ற புதிய நெருக்கடியை இந்தியா எதிர்கொள்கின்றதா என்ற கேள்வியும் உண்டு.






# மட்டு. ஊடகவியலாளர்களால் கறுப்பு ஜனவரி அனுஷ்டிப்பு!

(பழுவூரான்)

இலங்கையில் காணாமலாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக அனுஷ்டிக்கப்படும் கறுப்பு ஜனவரி தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு காந்திப்பூங்கா வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு. ஊடக அமையம் மற்றும் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் ஆகியன ஒன்றிணைந்து நடத்திய கவனவீர்ப்புப் போராட்டம் மேற்படி அமைப்புக்களின் தலைவர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் கறுப்புப் பட்டி அணிந்து, தீப்பந்தம் ஏந்திப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது ஊடகவியலாளர்கள் "வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்", "அனுர அரசே ஊடகவியலாளர்கள் படுகொலைக்கு நீதி வழங்கு, "கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச விசாரணை வேண்டும்" போன்ற கோசங்களை எழுப்பினர்.









# அருட்தந்தை மீது தாக்குதல் நடத்திய 06 பொலிஸாரும் பணி இடைநீக்கம்

கத்தோலிக்க அருட்தந்தையொரு வரை தாக்கியதாகக் கூறப்படும் சம்ப வம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 06 பொலிஸ் உத்தியோகத்தர் களையும் பணி இடைநீக்கம் செய்வ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

பணி இடைநீக்கம் செய்யப்பட்ட உத் தியோகத்தர்களில் 03 சார்ஜன்ட்களும் 03 கான்ஸ்டபிள்களும் அடங்குகின் றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சா ளர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஃப். யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களான 06 பொலிஸ் உத்தியோகத்தர்களும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை மீண்டும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா பிரதம நீதவான் சீலனி பெரேரா முன்னிலையில் வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே சந்தேகநபர் களை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது.

சந்தேகநபர்களான பொலிஸ் உத் தியோகத்தர்களை அன்றைய தினம் அடையாளம் காணும் அணிவகுப்பில் ஆஜர்ப்படுத்துமாறும் நீதவான் உத்தர விட்டார்.

தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப் படும் கத்தோலிக்க அருட்தந்தை தொடர்ந் தும் சிகிச்சை பெற்று வருகிறார் என அவர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத் தரணி நெவில் அபேரத்ன நீதிமன்றத் திற்கு அறிவித்தார்.

கத்தோலிக்க அருட்தந்தை வழங்கிய முறைப்பாட்டிற்கமைய, சந்தேகநபர்க ளான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.




# அஸ்வெசும பயனாளிகளுக்கான பணம் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும்

அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களின் கீழ் தகுதி பெற்றுள்ள பயனாளிகளுக் கான ஜனவரி மாதக் கொடுப்பனவுகளும், இரு கட்டங்களுக்குமான ஜனவரி மாத முதியோர் கொடுப்பனவுகளும் இன்று அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என நிதி, திட்ட மிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி, அஸ்வெசும முதலாம் கட்டத்தின் கீழ் 1,415,584 பயனாளி குடும்பங்களுக்கு 11,234,713,750.00 ரூபா நிதி விநியோகிக்கப்பட்டு அவர்க ளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக் கப்படவுள்ளது.

அத்துடன், அஸ்வெசும முதலாம் கட்டத்தின் கீழான ஜனவரி மாத முதி யோர் கொடுப்பனவாக 618,440 பயனா ளிகளுக்கு 3,092,200,000.00 ரூபா நிதி விநியோகிக்கப்படவுள்ளது.

அதேபோல், அஸ்வெசும இரண்டாம் கட்டத்தின் ஜனவரி மாதக் கொடுப்பன வாக 248,454 பயனாளி குடும்பங்க ளுக்கு 2,235,137,500.00 ரூபா நிதி விநியோகிக்கப்பட்டு அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படவுள் ளது.

மேலும், அஸ்வெசும இரண்டாம் கட்டத்தின் கீழான ஜனவரி மாத முதி யோர் கொடுப்பனவாக 68,183 பயனா ளிகளுக்கு 340,915,000.00 ரூபா நிதி விநியோகிக்கப்பட்டு அவர்களின் அஸ்வெசும கணக்குகளில் வரவு வைக் கப்படவுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.



# 2 மாதங்களின் பின் சடலம் மீட்பு; தொடரும் மண்சரிவு அவலங்கள்

வெலிமடை, கவரம்மன பகுதியில் கடந்த நவம்பர் மாதம் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி காணாமல் போயிருந்த 30 வயதுடைய பொதுமகனின் உடலம், நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் சாரதியாக பணியாற்றி வந்துள்ளார்.

கடந்த நவம்பர் 26 ஆம் திகதி பிற்பகல், மண்சரிவினால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்ய வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்கள் அப்பகுதிக்கு சென்றுள்ளனர்.

இதன்போது நவம்பர் 27ஆம் திகதி காலை, வீதியை வழிமறித்து வீழ்ந்திருந்த மரத்தை அகற்றிக் கொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

கடும் மழையினால் மீட்பு பணிகளில் பெரும் சவால்கள் நிலவிய நிலையில், சுமார் 2 மாதங்களுக்கும் மேலான தேடுதல் நடவடிக்கைகளுக்குப் பிறகே தற்போது உடலம் மீட்கப்பட்டுள்ளது.

# அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பு

## அமைச்சரவைப் பேச்சாளர் தகவல்



மருத்துவர்கள் உட்பட முழு அரச சேவைக்கும் 2026 ஆம் ஆண்டுக்கான அடிப்படை சம்பள உயர்வை வழங்குவதற்காக அரசாங்கத்திற்கு மேலதிகமாக 220 பில்லியன் ரூபா செலவாகியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2027 ஆம் ஆண்டில் அரச பணியாளர்களுக்கான வேதனத்துக்காக 330 பில்லியன் ரூபாய் செலவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போதே இந்த் தகவலை வெளியிட்டுள்ளார்.

அரசாங்கம், இந்த மாதம் மருத்துவர்கள் உட்பட நாட்டின் அனைத்து அரச பணியாளர்களுக்கும் அடிப்படை சம்பளம் உயர்வை வழங்கியுள்ளது.

அந்த அடிப்படை சம்பள உயர்வுக்காக மாத்திரமே இந்த ஆண்டு 220 பில்லியன் ரூபாய் செலவாகின்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார். 2025 ஆம் ஆண்டில் 110 பில்லியன் ரூபா செலவானதுடன், இந்த ஆண்டு 220 பில்லியன் ரூபா செலவாகிறது.

2027 ஆம் ஆண்டில் 330 பில்லியன் ரூபாய் செலவாகும் என்பதுடன், இது இந்த வேதன உயர்வுக்காக மாத்திரமே செலவிடப்படவுள்ளதாகவும் அமைச்சரவை பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதிகரிக்கப்பட்ட அடிப்படை வேதனத்துக்கு ஏற்ப மேலதிக நேரக் கொடுப்பனவுகள், மேலதிக கொடுப்பனவுகள், விடுமுறை நாள் கொடுப்பனவுகள் அதிகரிக்கும்.

நாட்டின் பொருளாதார நிலைக்கு ஏற்ப இவற்றைச் செய்ய முடியும் என்றும் அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



# பத்தரமுல்லையில் ஓர் உல்லாசத் தீவு

பத்தரமுல்ல பகுதியில் ஒரு பெரிய பொது ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு வலயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட, தியவன்னா ஓயாவின் இரு கரைகளிலும் "உல்லாச தீவு பொழுதுபோக்கு மையம்" திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த திட்டத்திற்காக தியவன்னா ஓயாவை அண்மித்த 13.57 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட 9 காணித் துண்டுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் கொள்முதல் வழிகாட்டல்களுக்கு அமைய, சர்வதேச போட்டித் தன்மை வாய்ந்த ஏல நடைமுறையின் மூலம் இதற்கான முதலீட்டு முன்மொழிவுகளைக் கோருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அடையாளம் காணப்பட்ட ஒன்பது காணித் துண்டுகளும் பொழுதுபோக்கு மற்றும் ஓய்வுநேரச் செயல்பாடுகள் தொடர்பான திட்டங்களுக்காக நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை, தியவன்னா ஓயாவை அண்மித்த பத்தரமுல்லை சதுப்பு நிலப் பகுதியில் வெள்ளத் தடுப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளை இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஏற்கனவே நிறைவு செய்துள்ளது.

குறிப்பாக, "வோட்டர்ஸ் எட்ஜ்" விருந்தகத்தை சூழவுள்ள நீர்வழிகள் சீரமைக்கப்பட்டுள்ளன.

இது எதிர்கால பொழுதுபோக்குத் திட்டங்களுக்குப் பக்கபலமாக அமைவதோடு, திட்டப் பகுதியின் நிலைத்தன்மையையும் உறுதிப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவுக்கே அமைச்சரவை தற்போது அனுமதி வழங்கியுள்ளது.

# மலையக மக்களின் அவல நிலை; ஐ.நா. பிரதிநிதியிடம் முறைப்பாடு

டித்வா பேரிடரால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழ் மக்களின் தற்போதைய அவல நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ்சை, மலையக மீள்கட்டுமானத்திற்கான சிவில் சமூக கூட்டிணைவு நேரில் சந்தித்து விளக்கமளித்துள்ளது.

அரசு அறிவித்துள்ள நிவார ணங்களைப் பெற்றுக்கொள்வதில் மலையக மக்களுக்கு இழைக்கப்படும் பாரபட்சங்கள் குறித்து ஐ.நா பிரதிநிதியிடம் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், முறையான வீடமைப்பு மற்றும் காணி கொள்கை இல்லாமை, உட்கட்டமைப்பு சீரமைப்பில் நிலவும் தாமதம் போன்றவற்றால் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து விளக்கப்பட்டது.

மீள்கட்டுமானப் பணிகளின் போது பெண்கள் மற்றும் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பாதுகாப்பு சவால்கள் குறித்தும் விசேட கவனம் கோரப்பட்டது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதியுடன் கூடிய காணி மற்றும் தனி வீடுகளைக் கொண்ட புதிய கிராமங்களை உருவாக்குவதே நிரந்தரத் தீர்வாகும் என வலியுறுத்தப்பட்டது.

இந்த கோரிக்கைகளை அரசின் உயர்மட்டத்தினரிடம் கொண்டு செல்வதாக உறுதியளித்த மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச், கள நிலவரங்களை நேரில் கண்டறிய விரைவில் மலையகத்திற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.



# சுண்டிக்குளம் மீனவர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

உழவியந்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள வீஞ்சு முறையிலான கரைவலத் தொழிலை மேற்கொள்ள தடுக்கப்பட்டுள்ளமையை எதிர்த்து மீனவர்கள் நேற்று முன்தினம் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி பிரதே செயலகத்திற்குட்பட்ட சுண்டிக்குளம் – பூனைத் தொடுவாய் அண்மித்த பகுதியில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உழவியந்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள வீஞ்சு முறையிலான கரைவலைத் தொழிலை மேற்கொள்ள கடந்த அரசு காலத்தில் நீரியல்வளத் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதியின் பிரகாரம் உழவியந்திரத்தில் இணைக்கப்பட்டுள்ள வீஞ்சு முறையிலான கரைவலைத் தொழிலை மேற்கொள்ள தற்போது நீரியல்வளத் திணைக்களத்தினரால் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதனால் நூற்றுக் கணக்கான மீனவ தொழிலாளர்களும், சம்மாட்டிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என கவயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி இந்த விடயத்தில் கவனம் செலுத்தி தமக்கு கால அவகாசத்தை வழங்க வேண்டும் என்றும் உடனடியாக நிறுத்தும் பட்சத்தில் பல கோடி ரூபா நட்டத்தை எதிர் நோக்க வேண்டியுள்ளதுடன் ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக் குறியாகி நிர்க்கதியாக வேண்டி ஏற்படும் எனவும் தெரிவித்தனர்.



நாம் கரைவலைத் தொழிலை மேற்கொள்ள முடியாதவாறு நூற்றுக் கணக்கான இந்திய மீனவர்களது றோளர் படகுகள் சுண்டிக்குளம் கடற்கரையோரமாக ஆக்கிரமித்துள்ளன. அவற்றை கட்டுப்படுத்த முடியாத நீரியல்வளத் திணைக்களத்தினர் எமது வாழ்வாதாரத்தை தடுத்து நிறுத்துகின்றனர் என மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

புத்தளம் , உடப்பு பகுதிகளில் நூற்றுக் கணக்கான மீனவர்கள் கூலித் தொழிலாளர்களாக தொழில் செய்து வருகின்றனர். அத்துடன் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் எனப் பலரும் தொழில் புரிந்து வரும் நிலையில் தமக்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.





# தமிழ்நாட்டில் ஓட்டப்பந்தையத்தில் முதலாமிடம் பெற்று ஈழத்தமிழ் சிறுமி







தமிழ்நாட்டில் மாவட்ட மட்டத்தில் இடம் பெற்ற 400 மீற்றர் ஓட்டப்பந்தையத்தில் ஈழத்தமிழ் சிறுமி ஜெ.டிலாஜினி முதலாமிடத்தை பெற்று சாதனை படைத்துள்ளார்.

திருச்சியில் அண்ணா விளையாட்டரங்கில் கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட அளவிலான 400 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் ஜெ.டிலாஜினி முதலிடம் பெற்றார்.

தமிழ்நாட்டில் அகதிகளாக உள்ள வல்வெட்டித்துறையை சேர்ந்த ஜெயக்குமார் மிரா தம்பதியரின் மகளான டிலாஜினி நீச்சல் போட்டிகளிலும் பல்வேறு நிலைகளில் பதங்களை வென்று சாதனை படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஜனநாயகன்’ படத்துக்கு தொடரும் சிக்கல்: மீண்டும் விசாரிக்க நீதிபதி அமர்வு உத்தரவு



நடிகர் விஜய் நடித்த ஜனநாயகன் படம் தொடர்பான வழக்கை, மீண்டும் முதலில் இருந்து முழுமையாக விசாரிக்க தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டுள்ளது.

த.வெ.க. தலைவர் நடிகர் விஜய் நடித்துள்ள கடைசிப் படம் ஜனநாயகன். பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த 9 ஆம் திகதி படம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், மத்திய தணிக்கை வாரியம் மறுஆய்வு குழுவுக்கு பரிந்துரை செய்தது. இதுதொடர்பான வழக்கு கடந்த ஜனவரி 20 ஆம் திகதி உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் தீர்ப்பை தள்ளி வைத்திருந்தனர்.

இந்த வழக்கில் தலைமை நீதிபதி அமர்வு நேற்று அளித்த தீர்ப்பில்,

இந்த வழக்கை விசாரித்த தனி நீதிபதி, தணிக்கை வாரியம் பதில் அளிக்க கால அவகாசம் அளிக்கவில்லை. எனவே, தணிக்கை சான்றிதழ் வழங்க வேண்டுமென தனி நீதிபதி பிறப்பித்த உத்தரவை ரத்து செய்கிறோம். இப்படத்தில் மத நல்லிணக்கத்துக்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும், இராணுவ சின்னங்கள் அனுமதியின்றி பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளதாக புகார் வந்துள்ளதால் படத்தைமறுஆய்வுக்குஅனுப்பதணிக்கை வாரியம் உத்தரவிட்டுள்ளது.

அதை எதிர்த்து படத்தயாரிப்பு குழு மீண்டும் புதிதாக மனு தாக்கல் செய்ய வேண்டும். அல்லது ஏற்கெனவே தொடரப்பட்ட வழக்கில் கோரிக்கையில் மாற்றங்களை செய்து தாக்கல் செய்ய வேண்டும். அந்த வழக்கை தனி நீதிபதி மீண்டும் முழுமையாக விசாரித்து தகுதியின் அடிப்படையில் தீர்ப்பளிக்க வேண்டும். அப்போது தணிக்கை வாரியம் தரப்பில் விளக்கமளிக்க தனி நீதிபதி போதுமான அவகாசம் அளிக்க வேண்டும் என்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு உத்தரவிட்டது.

இதனால் ஜனநாயகன் படம் வெளியாவதில் தொடர்ந்து இழுபறி நிலவுகிறது.

# இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்து



இந்தியாவுக்கும் ஐரோப்பிய யூனியனுக்கும் இடையில் வரலாற்றுச் சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நேற்று கையெழுத்தானது.

அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாவதில் சிக்கல் நீடிக்கும் சூழலில் ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அந்தோனியோ கோஸ்டா மற்றும் ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் டில்லி சென்றனர்.

நாட்டின் 77 ஆவது குடியரசு தின விழா நேற்று முன்தினம் டில்லியில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஐரோப்பிய பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்று சிறப்பித்தனர்.

இந்நிலையில், டில்லியில் நேற்று 16 ஆவது இந்தியா – ஐரோப்பிய யூனியன் உச்சி மாநாடு நடைபெற்றது. இதில் இந்தியா – ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது.

பிரதமர் மோடி மற்றும் ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் முன்னிலையில், மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், ஐரோப்பிய வர்த்தகம் மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு ஆணையர் மாரோஸ் செஃப்கோவிக் ஆகியோர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இதை பிரதமர் மோடி, ஐரோப்பிய ஆணைய தலைவர் உர்சுலா ஆகியோர் கூட்டாக அறிவித்தனர்.

பின்னர் டில்லியில் உள்ள ஹைதராபாத் மாளிகையில் பிரதமர் மோடி, ஐரோப்பிய ஆணையதலைவர் உர்சுலா மற்றும் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அந்தோனியோ கோஸ்டா ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது பிரதமர் மோடி கூறுகையில்,

“இந்த ஒப்பந்தம் இந்திய – ஐரோப்பிய உறவில் வரலாற்று சிறப்புமிக்க தருணம். சர்வதேச பொருளாதார சூழலில் இந்த ஒப்பந்தம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இது வெறும் வர்த்தக ஒப்பந்தம் மட்டுமல்ல. இருதரப்பின் வளமான எதிர்காலத்துக்கான புதிய வரைபடம்.

இந்த ஒப்பந்தம், சிறுதொழில்முனைவோர், விவசாயிகள் உள்ளிட்டோர் ஐரோப்பிய சந்தைகளை அதிகளவில் அணுகுவதற்கு வழிவகுக்கும்.” என்றார்.

ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா பேசுகையில், “இந்த ஒப்பந்தம் அனைத்து ஒப்பந்தங்களின் தாய்.” என்று வர்ணித்தார்.

# 30 நாள்கள் இலவச விசா: இந்தியா அதிரடி அறிவிப்பு

இந்தியாவின் 77ஆவது குடியரசு தினத்தை சிறப்பிக்கும் வகையில், கசகஸ்தான் நாட்டுப் பிரஜைகள் இந்தியா வருவதற்கு 30 நாள்கள் இலவச விசா வழங்கப்படும் என கசகஸ்தானுக்கான இந்திய தூதுவர் சைலாஸ் தங்கல் அறிவித்துள்ளார்.

சுற்றுலா, மருத்துவம் உள்ளிட்ட குறுகிய காலத் தேவைகளுக்காக இந்தியா வருவோரை ஊக்குவிக்க இந்திய வெளியுறவு அமைச்சு இந்த திட்டத்தை அறிவித்துள்ளது.

இதன்படி தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் இந்திய தூதரகத்தில் நேரிலோ அல்லது நிகழ்நிலை மூலமாகவோ விண்ணப்பித்து இந்த விசாவைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியாவின் இந்த அறிவிப்பால் கசகஸ்தான் நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேலும் வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# நிபா வைரஸ் பரவல் அதிகரிப்பு; மியன்மாரில் தீவிர கண்காணிப்பு

மியன்மாரில் இதுவரை நிபா வைரஸ் பாதிப்புகள் எதுவும் கண்டறியப்படாத போதிலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கண்காணிப்புப் பணிகளை அந்நாட்டு சுகாதார அமைச்சு தீவிரப்படுத்தியுள்ளது.

இதன்படி இது தொடர்பான விசேட சுகாதார ஆலோசனைகளையும் நேற்று வெளியிட்டது.

நிபா வைரஸைப் பரப்பும் முக்கிய காரணியான பழம் தின்னும் வெளவால்கள் மியன்மாரில் அதிகளவில் காணப்படுகின்றன.

நிபா வைரஸ் பாதிப்பு அடிக்கடி பதிவாகும் நாடுகளுடன் மியன்மார் எல்லைகளைப் பகிர்ந்து கொள்வதால், வைரஸ் ஊடுருவும் அபாயம் உள்ளதாகக் கருதப்படுகின்றது.

இந்தியாவின் மேற்கு வங்கம் உள்ளிட்ட நிபா வைரஸ் பரவல் உள்ள பகுதிகளுக்குத் தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருப்பவர்கள், அவசர தேவையின்றி வைத்தியசாலைகளுக்கோ அல்லது நோயாளிகள் அதிகம் உள்ள இடங்களுக்கோ செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

காய்ச்சல், தலைவலி, இருமல், மூச்சுத்திணறல் அல்லது மயக்க நிலை போன்ற அறிகுறிகள் தென்பட்டால், உடனடியாக விமான நிலைய சுகாதாரப் பிரிவிடமோ அல்லது எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளிடமோ தெரிவிக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட நாடுகளிலிருந்து திரும்பிய 14 நாள்களுக்குள் இத்தகைய அறிகுறிகள் தோன்றினால், உடனடியாக அருகில் உள்ள சுகாதார நிலையத்தைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து திரும்பிய உறவினர்களுக்கு சந்தேகத்திற்கிடமான அறிகுறிகள் இருந்தாலோ அல்லது உங்கள் பகுதியில் பன்றிகள் மற்றும் வெளவால்கள் அசாதாரணமான முறையில் உயிரிழந்தாலோ, தாமதிக்காமல் உள்ளூர் சுகாதார அதிகாரிகளுக்குத் தகவல் வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.







# காசாவில் 843 நாள்களாக நீடிக்கும் போர் 251 பணயக் கைதிகளை மீட்டது இஸ்ரேல்

காசாவில், 843 நாள்களாக நீடிக்கும் போருக்கு மத்தியில், 251 பணயக் கைதிகளும் அங்கிருந்து மீட்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இறுதியாக, இஸ்ரேலிய இராணுவ வீரர் ரான் கிவிலியின் உடல் மீட்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், காசாவில் இருந்த 251 பணயக் கைதிகளும், உயிருடனும் உடலங்களாகவும் மீட்கப்பட்டுள்ளனர் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், அமெரிக்கா, எகிப்து, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் துருக்கி ஆகிய நாடுகளின் பங்களிப்புடன் சர்வதேச அமைதிகாக்கும் படை காசாவில் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ளும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ட்ரம்பின் சர்வதேச அமைதி திட்டத்தின் மேற்பார்வையில் காசாவை மீண்டும் கட்டியெழுப்பும் பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்க டொலருக்கு நிகரான ஈரானிய ரியால் பெரும் சரிவு!



ஈரானின் தேசிய நாணயமான ரியால், அமெரிக்க டொலருக்கு நிகராக 1.5 மில்லியன் என்ற வரலாறு காணாத சரிவைச் சந்தித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த கடும் பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வால் கடந்த டிசம்பர் 28 அன்று தொடங்கிய மக்கள் போராட்டங்கள் நாடு முழுவதும் காட்டுத் தீயாகப் பரவின.

ஈரானின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ள நிலையில், அங்கு நிலவும் கடும் அடக்குமுறைகள் மற்றும் சர்வதேச இராணுவ நகர்வுகள் காரணமாக மத்திய கிழக்கு பிராந்தியம் போரின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளது.

போராட்டங்களை ஒடுக்க ஈரான் அரசாங்கம் மேற்கொண்ட வன்முறைத் தாக்குதல்கள் குறித்து மனித உரிமை அமைப்புகள் வெளியிட்டுள்ள தரவுகள் உலகை அதிரவைத்துள்ளன.

86 சிறுவர்கள் மற்றும் 49 பொதுமக்கள் உள்ளடங்களாக குறைந்தது 6,126 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

சுமார் 41,800 இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஈரானின் வரலாற்றிலேயே மிக நீண்ட காலமான இரண்டுவாரங்களுக்குமேலாக இணைய சேவை முழுமையாகத் துண்டிக்கப்பட்டது.

ஈரான் அரசாங்கம் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3,117 மட்டுமே எனக் கூறி வரும் நிலையில், உண்மையான பாதிப்பு இதைவிட அதிகமாக இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.01.2025




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும்.உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதியான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று கடினமான சூழ்நிலைகளை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதற்றத்துக்கு ஆளாவீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப் படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.

அசௌகரியம் காரணமாக ஆரோக்கியம் பாதிக் கப்படும். தோல் சம்பந்தமான பிரச்சினைகளும் தூக்க மின்மையும் காணப்படும்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்கு களில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளி தாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள் வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷயங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள். புதிய முதலீட் டிற்கான முடிவுகளை எடுக்கலாம்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதி யுடனும் கவனமுடனும் செயல்பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப் படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள் வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதற்றம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று உங்கள் செயல்களில் கவன மாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடத்தில் பொறுமையின்மையும் கவன மற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சி யற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்ட மிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வ தன் மூலம் வெற்றி பெறலாம். அமைதி யாக இருந்து பத ற் ற த்தை தவிர்ப்ப தன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது.




இன்று தேவையற்ற மனக் குழப்பங் கள் சுமையாக இருக்கும். நம்பிக்கை யுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவி யுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.01.2025




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல் திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையுடன் இவைகளை சமாளிக்க வேண்டும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பனியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணியாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக்கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.

# தலைமன்னார் பகுதியில் 1,158 சங்குகளை சட்டவிரோதமாக வைத்திருந்த நபர் கைது

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

இலங்கை கடற்படை, மன்னார் மீன்வள ஆய்வாளருடன் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தலைமன்னார், எருக்கலம்பிட்டி பகுதியில் நடத்திய கூட்டுத் தேடுதல் நடவடிக்கையின் போது, அங்கீகரிக்கப்பட்ட சட்ட வரம்பை மீறி ஆயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு சங்குகளை சேமித்து வைத்திருந்த ஒரு நபரை கடற்படையினர் கைது செய்தனர்.

மன்னார் மீன்வள ஆய்வு அலுவலகத்துடன் இணைந்து வடமத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் கஜபா நடத்திய இந்த தேடுதல் நடவடிக்கையின் போது, அப்பகுதியில் உள்ள ஒரு சந்தேகத்திற்கிடமான வீட்டை சோதனையிட்டனர். அங்கு, வீட்டில் சேமித்து வைக்கப்பட்டிருந்த, 70 மி.மீ. சுற்றளவு சட்டப்பூர்வ வரம்பை பூர்த்தி செய்யாத சுமார் ஆயிரத்து நூற்று ஐம்பத்தெட்டு சங்குகளுடன் சந்தேக நபர் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டார்.





கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னார், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த 65 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார்.சந்தேக நபர், சங்குகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டார்.